# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மானியக் கோரிக்கை எண்–35**

# அறிவிப்புகள்

# 2014–2015

**எஸ்.பி. வேலுமணி**
**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,**
**நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**

# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## அறிவிப்பு

**வெவ்வேறு அரசுத் துறைகளிலுள்ள 25 சேவைகளின் நடைமுறைகளை எளிமைப்படுத்தி திருத்திய நடைமுறைகளை வெளியிடுதல் தொடர்பாக.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அரசுத் துறைகளின் வழியாக மக்களுக்கு ஆற்றும் சேவையை விரைவுப்படுத்தும் நோக்கோடு, பல்வேறு துறைகளின் கீழ்வரும் குறைந்தது 25 சேவைகளை கண்டறிந்து, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து அவற்றை எளிமைப்படுத்தி முறைப்படுத்தவும், இந்நடவடிக்கையில் பொதுமக்களும் தங்களது மேலான கருத்துக்களை நல்கிட ஊக்குவிக்கலாம். மேற்கண்ட ஆலோசனைகள் பெறப்பட்டு, திருத்திய நடைமுறைகள் வகுக்கப்பட்ட பின்னர், அதற்கேற்ப அந்தந்த துறைகளில் உள்ள விதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். முன்மொழியப்பட்ட இந்த நடைமுறைகளை எளிமைப்படுத்தி முறைப்படுத்தும் நடவடிக்கையில், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையானது சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து பணி முழுவதும் முடிவடைந்து வெளியிடும் வரை முக்கிய பங்காற்றும்.